1982 மார்ச் 9]

பணித் துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபோது அவைகள் எல்லாம் தங்குவதற்கு வசதியற்ற நிலையிலே இருப்பதாகச் சொன்னார் கள். அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. இருந் தாலும் அந்த வீடுகளை மேம்பாடு அடையச் செய்யவும் சுற்று லாத் துறை பொதுப்பணித் துறைக்குத் தகவல் தரும். மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் குறிப்பை பொதுப் பணித் துறைக்கு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் தண்ணீர் பிடிக் கிற நடுப்பகுதியில் மேடான ஒரு பாகம் இருக்கிறது. அதை மக்கள் சென்று பார்க்கிற வகையிலே—ஏற்கனவே கிருஷ்ணா நதியிலே இப்படி அமைத்திருக்கிறார்கள்—படகு போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுத்தால் அங்கிருக்கும் கல் வெட்டுகள் முத லியவற்றைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். இதற்கு அமைச்ச சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் அணை மக்கள் பாராட்டுகிற சுற்றுலாப் பகுதியாக அமைந்திருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே அந்தப் பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை எல்லாம் அடிப்படையாக வைத்து மேலும் நல்ல பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அரசு பரிசீலனை செய்யும்.

கரும்பு வளர்ச்சிப்பணியினை மாற்றியமைக்கும் திட்டம்.

*வினா எண் 426—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து சர்க்கரை உற்பத்தி இயக்குநருக்கு மாற்று வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மை இயக்குநரிடமிருந்து சர்க்கரை இயக்குநருக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து தற்போதுள்ள அமைப்பே தொடர்ந்து நீடிக்கலாம் என முடிவெடுத்துள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தி இயக்குநர், கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து தனக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில்தான் அரசு அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறது என்று அறிகிறேன். அப்படி முடிவு எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சர்க்கரை இயக்குநர் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கும் பணியில் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார். கரும்பு வளர்ச்சிக்கான பணியிலே அத்துறைக்கு அனுபவம் இல்லை. அதனால் வேளாண்மை இயக்குநர் துறையில் கரும்பு வளர்ச்சிப் பணியில் நல்ல அனுபவம் உள்ள அலுவலர்கள் பணிபுரிகிறார்கள் என்ற காரணத்தினால் கரும்பு வளர்ச்சிப் பணி வேளாண்மை இயக்குநரிடமே இருக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

தமிழகத்தில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர் ஆராய்ச்சித் திட்டம்.

*வினா எண் 427—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், ஸ்வீடன் நாட்டு உதவியுடன் நீர் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஸ்வீடன் நாட்டு உதவியுடன் கோவையில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பது சம்பந்தமான கருத்துரு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 150 இலட்சங்களையும் ஏற்க ஸ்வீடனின் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் முன் வந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் கடல் நீரிலிருந்து விவசாயம் செய்கிறார்கள். அதே மாதிரி நீர் ஆராய்ச்சியில் தமிழ்நாட்டில் உள்ள சாகுபடியின் பரப்பை அதிகப்படுத்த கடல் நீரில் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?